**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 1/ PW - 1**

Name : குணசீலன் Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **17.03.2025**

**( எதிரிகள் 5, 6, 15, 24, 29 ஆகியோர்களுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)**

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற **WP 33878/2024** உத்தரவின் அடிப்படையில் **Home (Courts. VI A) Department** 09.12.2024 தேதியிட்ட **G.O.(D). No. 1485** ன் படி வழக்கறிஞர் திரு.**B.**மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி கிராமத்தில் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து– பறையன் வகுப்பைச் சார்ந்தவர். எங்கள் பொன்பரப்பி கிராமத்தில் காலனி தெருவில் வசிப்பவர்கள் எல்லோரும் இந்து – பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள்தான். ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள். 2019 நாடாளுமன்ற தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டார். பொன்பரப்பி கிராமம் சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்டது. அவருக்கு பானை சின்னம் ஒதுக்கப்பட்டது. திருமாவளவனுக்கு எதிராக அஇஅதிமுக கட்சியில் சந்திரசேகரன் என்பவர் போட்டியிட்டார். அப்பொழுது அஇஅதிமுக கட்சிக்கு ஆதரவாக யார் வேலை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எங்கள் தலைவருக்கு ஆதரவாக வேலை செய்தேன். ஆஜர் எதிரிகள் அந்த தேர்தலில் யாருக்காக வேலை செய்தார்கள் என்பது

எனக்கு தெரியாது. அந்த தேர்தல் 19.04.2019 ல் நடந்தது. அன்றைய தேர்தலில் நான் 08.00 மணிக்கு ஓட்டு போட்டுவிட்டு 09.00 மணிக்கு என் வீட்டிற்கு வந்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. அந்த புகாரை கட்சியிலிருந்து தோழர்கள் என்னை கொடுக்க சொன்னதால் நான் கொடுத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் **TN 45 AK 6855 – TVS Star City** என்ற வாகனத்தை அப்போது வைத்திருந்தேன். அந்த வாகனம் அன்று சேதமாகிவிட்டது என்று சொன்னால் அது கீழே விழுந்ததால் சேதமாகிவிட்டது. நான் கொடுத்த புகாரில் **DSP** என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. என்னை கையெழுத்து போடச் சொன்னார்கள். நான் போட்டேன். எங்கள் காலனியிலிருந்து ஒரு ½ கிலோ மீட்டர் தூரத்திலேயே வன்னியர்கள் வீடு உள்ளது. காலனியை ஒட்டிய ரோடு கீழ்மேல் ரோடு, கீழ்மேல் ரோட்டிற்கு தெற்கே மாணவியர் விடுதி உள்ளது என்றால் சரிதான். அந்த மாணவியர் விடுதியிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் எலெக்சன் பூத் இருந்தது. 18.04.2019 ஆம் தேதி நான் தான் போலிஸ்டேன் போய் திருமாவளவனுக்கு ஓட்டு போட்ட பற பசங்க என்று எதிரிகள் எங்களை திட்டி, தாக்கினார்கள் என்றும் இந்த ஊரில் எப்படி நீங்கள் குடியிருப்பீர்கள் என்று மிரட்டினார்கள் என்றும் எங்கள் வீடுகளை தாக்கியும், எங்கள் குடியிருப்பில் வசித்த 16 காலனி மக்களை தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றாலும் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. **DSP** என்னை விசாரித்தபோது கத்தி, தடி, பெட்ரோல் குண்டு ஆகியவைகளை வைத்து எதிரிகள் எங்களை தாக்கி, காயம் ஏற்படுத்தினார்கள் என்றும் மிரட்டினார்கள் என்றும் 120 க்கும் மேற்பட்ட சேரி வீடுகளை அடித்து சேதப்படுத்தினார்கள் என்றாலும் கண்ணில் பட்ட ஆண்கள் பெண்கள் அனைவரையும் கொலை செய்யும் நோக்கோடு தாக்கினார்கள்

என்றும் அந்த தாக்குதலில் வடிவேல் மகன் ரவி உயிருக்கு ஆபத்தான முறையில் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் 108 ஆம்புலன்ஸ் மூலமாக சேர்க்கப்பட்டும், மேலும் கருப்பன் மகன் செல்வகணபதி, என் மகன் அஜய், மாணிக்கம் மகன் செல்வராஜ், நாயத்தான் மகன் பிரகாஷ், கருப்பன் மனைவி மணிமேகலை, லெட்சுமணன் மற்றும் பிரபு, பிரீத்திவிராஜ் மனைவி கௌதமி ( சாட்சி பிரீத்திராஜின் மகள் கௌதமி என்கிறார்), குள்ளான் மகன் ராஜேந்திரன் ஆகியோருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்றும், முருகேசன் மகன் சத்தியசங்கர், ராசாங்கம் மகன் ராசா, பழனிசாமி மகன் பாஸ்கர், ஞானியார் மகன் முருகேசன், குடல் மகன் மதியழகன், பழனிசாமி மகன் வெற்றிவேல், இளங்கோவன் மகன் ஆனந்தன், இளங்கோவனின் இன்னொரு மகன் சரவணன், புலிக்குட்டி என்கிற இளையராஜா, ராஜேந்திரன் மகன் குமார், சண்முகம் மகன் பிரபு, தங்கம் மகன் கொளஞ்சிநாதன், கொளஞ்சிநாதனின் மகன் பாலமுருகன், சிற்றரசு மகன் ராமு, இட்லிக்கடை பழனிமுத்து யுவராஜ், மெக்கானிக் வேலு, கார்த்திக், மதியழகன் மகன் ஜீவா, செல்வகுமார், சக்திவேல் மகன் சொக்கன், பழனிசாமி மகன் சக்திவேல், மணிகுண்டு மகன் வாசுதேவன் ஆகியோர்களும் மற்றும் அடையாளம் தெரியாத வேறு சில நபர்களும் என் தலைவர் திருமாவளவனுக்கு ஓட்டு போட்டதால் சாதி வெறியோடு கொலை வெறி தாக்கல் நடத்தினார்கள் என்றால் அது உண்மையல்ல, அவ்வாறு நான் சொல்லவில்லை.  அடுத்த நாள் 19.04.2019 ஆம் தேதி DSP விசாரிக்கவில்லை நான் அன்று சிறையில் இருந்தேன்.  அன்றைய தேதியில் வடிவேல் மகன் ரவி, கருப்பன் மகன் செல்வகணபதி, என் மகனான அஜய், மாணிக்கம் மகன் செல்வராஜு, நாயத்தான் மகன் பிரகாஷ், கருப்பன் மகள் மணிமேகலை, லெட்சுமணன் மகன் பிரபு, பிரித்திவிராஜ் மனைவி கௌதமி, குள்ளான் மகன் ராஜேந்திரன் அவர்களோடு சேர்ந்து கொட்டப்புலி மகன் வடிவேலு, பஞ்சநாதன் மகன் வெற்றிவேல், சின்னசாமி மகன் பஞ்சமூர்த்தி, மொட்டையன் மகன் அன்பழகன் ஆகியோர்களுக்கும் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரியல்ல.  என்னுடைய **TNS 45 AK 65 55 – TVS Star City** என்ற வாகனம் அந்த தகராறில் தான் சேதமானது என்றால் சரியல்ல.  எதிரிகள் அனைவரும் ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு பயந்து நான் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் நான் அவர்களுக்கு பயப்படவே இல்லை. என் மீதும், வேறு 12 பேர் மீதும் SC.15/2020 வழக்கு உள்ளது என்றால் நாங்கள் கட்சியில் இருப்பதால் போலிசார் அந்த வழக்கை எங்கள் மீது போட்டுள்ளார்கள். எதிரிகளின் செய்கையால் நாங்கள் பாதிக்கப்பட்டு காயம் அடைந்தோம் என்றாலும் தற்போது எதிரிகளுக்கு பயந்தும் எங்கள் மீது உள்ள SC .15/2020 வழக்கிலிருந்து நாங்கள் விடுதலை ஆக வேண்டும் என்பதற்காகவும் நான் கொடுத்த புகாருக்கு எதிராக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**–இல்லை.

**<u>மறு விசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.53/2019**

Prosecution Witness : **LW - 3 / PW - 2**

Name : **செந்தில்** Taluk :

S/o. : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
**17.03.2025**

( எதிரிகள் 5, 6, 15, 24, 29 ஆகியோர்களுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)
இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து –பறையர் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 குணசீலனை தெரியும். அவரும் இந்து – பறையர் வகுப்பைச் சார்ந்தவர்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் இந்து – வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எங்கள் காலனியில் இந்து பறையர் வகுப்பைச் சார்ந்தவர்கள் தான் குடியிருக்கிறார்கள். எதிரிகளும் அவர்கள் சாதியை சார்ந்தவர்களும் ரோட்டை தாண்டி குடியிருக்கிறார்கள். 18.04.2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியை சார்பாக திருமாவளவன் பானை சின்னத்தில் போட்டியிட்டார். அவருக்கு எதிராக அதிமுக சார்பாக சந்திரசேகரன் என்பவர் போட்டியிட்டார். சந்திரசேகரனை எதிரிகள் ஆதரித்தார்கள். நாங்கள் திருமாவளவனை ஆதரித்தோம். 18.04.2019 அன்று நான் ஓட்டு போட்டேன். ஓட்டு மையம் எங்கள் வீட்டிலிருந்து 1 ½ கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. நான்

காலையில் ஓட்டு போட்டேன். மதியம் 03.00 மணிக்கு மேல் நான் வீட்டிலிருந்தேன். அப்போது ரோட்டில் சத்தம் கேட்டது. எதிர்பார்டிகள் அங்கு இருந்தார்கள். அவர்கள் எங்கள் காலனிக்கு உள்ளே வந்தார்கள். அவர்கள் கையில் கட்டை, கம்பு வைத்துக்கொண்டு பானை சின்னத்திற்கு ஓட்டு போட்டு ஜெயிக்க முடியுமா என்று பேசினார்கள். பிரச்சனை பன்னுவதாக தெரிந்தது எனவே என் மனைவி என்னை வீட்டிற்குள் அழைத்து சென்றுவிட்டார். வீடுகளை அடித்து உடைத்துவிட்டார்கள். கூட்டத்தில் யார் என்று எனக்கு தெரியாது. ரோட்டில் வந்தவர்கள் கூட்டமாக இருந்தார்கள் அந்த கூட்டத்தில் இருந்தவர்களில் எதிரிகள் யார் இருந்தார்கள் என்று என்னால் அடையாளம் காட்டமுடியாது. என் வீடும் சேதமானது என்றால் சரிதான். சேதம் செய்தது ஆஜர் எதிரிகள் தரப்பினர் தான். அந்த சேதத்தை அரசாங்கம் சரி செய்து கொடுத்துவிட்டது. என் வீட்டை சேதப்படுத்தியது எதிரிகளில் யார் யார் என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது. எங்கள் தெருவில் இருந்த மொத்தம் 40 வீடுகள் சேதமாகி இருந்தது. அன்பழகனுக்கு காயம் ஏற்பட்டது. மேலும், ராஜதுரை, ரவி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். குணசீலன் இது குறித்து வழக்கு கொடுத்தார். வழக்கு குறித்து போலிசார் விசாரித்தார்கள்.

<u>மேற்சொன்ன சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னை DSP விசாரித்தபோது 18.04.2019 வாக்குபதிவு அன்று மதியம் 03.00 மணியளவில் எங்கள் வீட்டில் நான் இருந்தபொழுது ரோட்டில் அலறல் சத்தம் கேட்டது என்றும் நான் அங்கு சென்று பார்த்தபோது எங்கள் ஊரைச் சேர்ந்த முருகேசன், செல்வகுமார் என்கிற செல்வமுருகன், அருள்மணி த/பெ. இளங்கோவன், ராஜேஷ் த/பெ. சீனிவாசன், வடக்கு தெரு பொன்குடிக்காடு 5 வது தெரு அஜித் த/பெ. கோவிந்தன், திருக்குமரன் த/பெ.செல்லமுத்து, ராஜா த/பெ.கண்ணதாசன், சங்கர் த/பெ.பெருமாள், பாண்டியராஜன் த/பெ. கலியபெருமாள், வினோத் த/பெ. கலையரசன், பிரேம்குமார் த/பெ.கொளஞ்சிநாதன், விஜயகுமார்

த/பெ.வீரமுத்து, சத்தியசங்கர் த/பெ.குடல் என்கிற ராஜசுந்தரம், வெற்றிவேல் த/பெ.பழனிசாமி, ஆனந்தன் என்கிற முருகானந்தம் த/பெ.இளங்கோவன், சரவணன் த/பெ.இளங்கோவன், இளையராஜா என்கிற புலிக்குட்டி த/பெ.கதிர்வேல், குமார் த/பெ.ராஜேந்திரன், பிரபு த/பெ.சண்முகம், கொளஞ்சிநாதன் த/பெ.தங்கம், பாலமுருகன் த/பெ.கொளஞ்சி, ராமு என்கிற ராமகிருஷ்ணன் த/பெ. ஜெயராமன், பழனிமுத்து த/பெ.ஜெகநாதன், வேலு த/பெ.ராமசந்திரன், செல்வகுமார் த/பெ.கணேசன், ஜீவா த/பெ.மதியழகன், சொக்கன் என்கிற தெய்வசிகாமணி த/பெ.கலியபெருமாள், சக்திவேல் த/பெ.பழனிசாமி, சங்கர் என்கிற குட்டி த/பெ.அண்ணாதுரை, வாசுதேவன் த/பெ.மணிகுண்டு ஆகியோர்கள் தான் முதலில் ஒன்று சேர்ந்து கூடி வந்து ஏன்டா பற தேவடியா பசங்களா எங்க ஆளையே அடித்து விட்டு இந்த ஊரில் குடியிருக்க முடியுமா என்று கத்திக்கொண்டு அவர்கள் எல்லோரும் வைத்திருந்த கட்டை, இரும்பு பைப் ஆகிய கொடூர ஆயுதத்தால் எங்கள் தெருவில் உள்ள வீடுகளையும் வீட்டிற்கு முன்பு இருந்த பண்ட பாத்திரங்களையும், மோட்டாரையும் அடித்து நொறுக்கினார்கள் என்று சொன்னேன் என்றால் நான் அவ்வாறான செயல்கள் எதையும் நான் சொல்லவில்லை அவர்கள் பெயர்கள் எதையும் சொல்லவில்லை. கூட்டமாக சிலர் வந்தார்கள் என்று தான் சொன்னேன். கண்ணில்பட்ட ஆண்கள், பெண்கள் என அனைவரையும் செத்து தொலைங்கடா என்று சொல்லி கொலை செய்யும் நோக்கோடு அடித்தார்கள் என்றால் சரிதான். அப்பொழுது அவர்கள் என்னுடைய வீட்டின் ஓட்டையும் அடித்து உடைத்துவிட்டார்கள் என்றும் அதன் மதிப்பு சுமார் 7 ஆயிரம் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். இந்த கொலை வெறி தாக்குதலில் செல்வகணபதி, அஜய், செல்வராஜு, பிரகாஷ், மணிமேகலை, பிரபு, கௌதமி, பிரீத்தி, ரவி, வடிவேல், வெற்றிவேல், கிருஷ்ணமூர்த்தி, அன்பழகன் ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டு ரத்த காயத்தில் இருந்தவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரிதான். எங்கள் தெருவிற்கு 100 க்கும் மேற்பட்ட வன்னியர் வருகிறார்கள் என்ற தகவல் தெரிந்து நாங்கள் எல்லோரும் வீட்டை விட்டு ஓடிவிட்டோம் என்று போலிஸ்

விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். எதிரிகள் ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் போலிஸ் விசாரணையின் போது நடந்த உண்மையை சொல்லிவிட்டு தற்போது பயந்து எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>**

**<u>மறு விசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 4 / PW - 3** |
| Name : ஆசைத்தம்பி | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **17.03.2025**

(எதிரிகள் 5, 6, 15, 24, 29 ஆகியோர்களுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி தெருவில் வசித்து வருகிறேன். நான் இந்து–பறையர் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 குணசீலன், அ.சா.2 செந்தில் ஆகியோரை தெரியும். அவர்களும் இந்து – பறையர் வகுப்பைச் சார்ந்தவர்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். ஊர்க்காரர்கள் தான். அவர்கள் இந்து – வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள். 2019 ல் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியை சார்பாக திருமாவளவன் பானை சின்னத்தில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டார். அவருக்கு எதிராக அதிமுக சார்பாக ஒருவர் போட்டியிட்டார். அதிமுக சார்பாக நின்றவர்களை சிலர் ஆதரித்தார்கள். எதிரிகள் ஆதரித்தார்களா என்றால் எனக்கு அது தெரியாது. எனக்கும் அரசியலுக்கும் சம்மந்தம் இல்லை. அன்று நான் ஓட்டு போட்டேன். பிறகு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் அன்று வீட்டில் படுத்து தூங்கிவிட்டேன். மாலை 06.00,

07.00 மணிக்குத்தான் பிரச்சனை நடந்தது என்றும் சண்டை நடந்தது என்றும் கேள்விப்பட்டேன். என்ன சண்டை என்பதும் எனக்கு தெரியாது. போலிசார் அப்பொழுது விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன்.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

மதியம் 03.00 மணிபோல எங்கள் தெருவில் ஒரே அலறல் சத்தமா கேட்டது என்றும் நான் எனது வீட்டைவிட்டு வெளியே வந்து பார்த்தபோது எங்கள் ஊர் வன்னியர் சாதி பா.ம.கட்சியை சேர்ந்த முருகேசன் 2. செல்வக்குமார் 3. அருள்மணி, 4. ராஜேஷ், 5. அஜித் 6. திருகுமரன், 7.ராஜா, 8. சங்கர், 9. பாண்டியராஜன், 10. வினோத், 11. பிரேம்குமார், 12. விஜயகுமார், 13. சத்தியசங்கர், 14. ராசா, 15. பாஸ்கர், 16. மதியழகன், 17.வெற்றிவேல், 18. ஆனந்தன், 19. சரவணன், 20. இளையராஜா, 21, குமார், 22. பிரபு, 23. கொளஞ்சிநாதன், 24. பாலமுருகன், 25. ராமு, 26. பழனிமுத்து, 27. வேலு, 28.செல்வகுமார், 29. ஜீவா, 30. சொக்கன், 31. சக்திவேல், 32, சங்கர், 33. வாசுதேவன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து திரண்டு வந்து ஏன்டா பற தேவிடியா பசங்களா எங்க ஆளையே அடித்து விட்டு இந்த ஊரில் குடியிருக்க முடியுமா என்று கத்திக்கொண்டே அவர்கள் எல்லோரும் கையில் வைத்திருந்த கட்டை இரும்பு பைப் ஆகிய கொடூர ஆயுதங்களால் தெருவில் உள்ள வீடுகளையும் வீட்டில் இருந்த பண்ட பாத்திரங்களையும் மோட்டாரையும் அடித்து நொறுக்கினார்கள் என்றும் கண்ணில் பட்ட ஆண்கள் பெண்கள் எல்லோரையும் செத்து தொலைங்கடா என்று அடித்தார்கள் என்றும் என்னையும் அடிக்கவந்தார்கள் என்றும் என் வீட்னையும் அடித்து உடைத்துவிட்டாரகள் என்றாலும் சரியல்ல. தாக்குதலில் காயம் அடைந்த எங்கள் தெருவைச் சேர்ந்த செல்வகணபதி, அஜய், செல்வராஜு, பிரகாஷ், மணிமேகலை, பிரபு, கௌதமி, பிரீத்தி, ராஜேந்திரன், ரவி, வடிவேல் , வெற்றிவேல், கிருஷ்ணமூர்த்தி, அன்பழகன் ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு ரத்த

காயங்களுடன் இருந்தவர்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் 100 க்கும் மேற்பட்ட வன்னியர்கள் எங்கள் தெருவை நோக்கி வருவதாக தகவல் பரவியதால் எங்கள் தெருவைச் சேர்ந்தவர்கள் ஓடி விட்டார்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் நான் போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்பவத்தன்று வீட்டில் படுத்து தூங்கிவிட்டேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறு விசாரணை**—இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.53/2019** |
| Prosecution Witness : | **LW – 5 / PW - 4** |
| Name : ரவி | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **17.03.2025**

(எதிரிகள் 5, 6, 15, 24, 29 ஆகியோர்களுக்காக குவிமுச 317 மனு ஏற்பு. 3, 11, 28 எதிரிகள் இறந்துவிட்டதால் அவர்கள் மீதான குற்றம் அற்றுபோனது. மற்ற எதிரிகள் ஆஜர்.)

இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற WP 33878/2024 உத்தரவின் அடிப்படையில் Home (Courts. VI A) Department 09.12.2024 தேதியிட்ட G.O.(D). No. 1485 ன் படி வழக்கறிஞர் திரு.B.மோகன் சிறப்பு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டு ஆஜரானார்.

**முதல் விசாரணை**

நான் பொன்பரப்பி காந்தி நகர் காலனி பகுதியில் வசித்து வருகிறேன். நான் இந்து–பறையர் வகுப்பைச் சார்ந்தவர். அ.சா.1 குணசீலன், அ.சா.2 செந்தில் அ.சா.3 ஆசைத்தம்பி ஆகியோர்களை தெரியும். அவர்களும் இந்து – பறையர் வகுப்பைச் சார்ந்தவர்தான். ஆஜர் எதிரிகளை தெரியும். ஊர்க்காரர்கள் தான். அவர்கள் இந்து – வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள். 2019 ல் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. DPI கட்சி சார்பாக திருமாவளவன் பானை சின்னத்தில் சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்டார். அவருக்கு எதிராக யார் போட்டியிட்டார் என்பது எனக்கு தெரியாது. நான் ஓட்டு போட்டுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் சாப்பிட்டுவிட்டு எனக்கு சொந்தமான 20 ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டி சென்றுவிட்டேன். திரும்பி வந்து பார்த்தபொழுது என் வீடும் மற்றும் சிலர் வீடும் உடைக்கப்பட்டு இருந்தது. யார் உடைத்தார்கள் என்பதும் என்ன நடந்தது என்பதும் எனக்கு தெரியாது. ஒரு முறை

போலிசார் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். நான் அப்பொழுதும் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன்.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

DSP என்னை விசாரித்தபோது சம்பவத்தன்று மதியம் 03.00 மணிபோல எங்கள் தெருவில் வன்னியர் சாதி பா.ம.கட்சியை சேர்ந்த முருகேசன் 2. செல்வக்குமார் 3. அருள்மணி, 4. ராஜேஷ், 5. அஜித் 6. திருகுமரன், 7.ராஜா, 8. சங்கர், 9. பாண்டியராஜன், 10. வினோத், 11. பிரேம்குமார், 12. விஜயகுமார், 13. சத்தியசங்கர், 14. ராசா, 15. பாஸ்கர், 16. மதியழகன், 17.வெற்றிவேல், 18. ஆனந்தன், 19. சரவணன், 20. இளையராஜா, 21, குமார், 22. பிரபு, 23. கொளஞ்சிநாதன், 24. பாலமுருகன், 25. ராமு, 26. பழனிமுத்து, 27. வேலு, 28.செல்வகுமார், 29. ஜீவா, 30. சொக்கன், 31. சக்திவேல், 32, சங்கர், 33. வாசுதேவன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து திரண்டு வந்து ஏன்டா பற தேவிடியா பசங்களா எங்க ஆளையே அடித்து விட்டு இந்த ஊரில் குடியிருக்க முடியுமா என்று கத்திக்கொண்டே அவர்கள் எல்லோரும் கையில் வைத்திருந்த கட்டை இரும்பு பைப் ஆகிய கொடூர ஆயுதங்களால் தெருவில் உள்ள வீடுகளையும் வீட்டில் இருந்த பண்ட பாத்திரங்களையும் மோட்டாரையும் அடித்து நொறுக்கினார்கள் என்றும் கண்ணில் பட்ட ஆண்கள், பெண்கள் எல்லோரையும் செத்து தொலைங்கடா என்று அடித்தார்கள் என்றும் என்னையும் அடிக்கவந்தார்கள் என்றும் என் வீட்னையும் அடித்து உடைத்துவிட்டாரகள் என்றாலும் சரியல்ல. தாக்குதலில் காயம் அடைந்த எங்கள் தெருவைச் சேர்ந்த செல்வகணபதி, அஜய், செல்வராஜு, பிரகாஷ், மணிமேகலை, பிரபு, கௌதமி, பிரீத்தி, ராஜேந்திரன், ரவி, வடிவேல் , வெற்றிவேல், கிருஷ்ணமூர்த்தி, அன்பழகன் ஆகியோர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு ரத்த காயங்களுடன் இருந்தவர்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் 100க்கும் மேற்பட்ட வன்னியர்கள் எங்கள் தெருவை நோக்கி

வருவதாக தகவல் பரவியதால் எங்கள் தெருவைச் சேர்ந்தவர்கள் ஓடி விட்டார்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்த ஆதிக்க சாதியை சேர்ந்தவர்கள் என்பதால் நான் போலிசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்பவத்தன்று வீட்டில் இல்லை. ஆடு மேய்க்க போய்விட்டேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறு விசாரணை**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.